# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 06.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 17275/SCIC/2025**

திருமதி.தனக்கோடி - மேல்முறையீட்டாளர்
த/பெ.கந்தசாமிக் கவுண்டர்,
எண்.65, ஓம் காளியம்மன் கோயில் வீதி
ஆ.புதுப்பாளையம், சக்தி நகர் அஞ்சல்
பவானி, ஈரோடு - 638 315
Phone: 98423 85825.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
கவுந்தப்பாடி சார்பதிவகம்
ஈரோடு மாவட்டம் - 638 455.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **29.05.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 27.06.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 01.07.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 10.09.2025 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 30.10.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 29/05/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் அலுவலகம், கவுந்தப்பாடி அவர்களுக்கு அனுப்பி, அதில் "பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.39708/C1/2018 நாள் 04/10/2018 பார்வை-2-ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி எனது தடை மனு மீது விசாரணை மேற்கொள்ளப்படாமலும் அதன் முடிவினை வெளியிடாமலும் தடை மனுவை பொருட்படுத்தாமலும் கடந்த 21/08/2024 அன்று ஆவண எண்.2368/2024 மற்றும் 15/11/2024 அன்று ஆவண எண்.3376/2024 ஆகிய கிரைய ஆவணங்கள் உங்கள் அலுவலகத்தின் மூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகையால் எதன் அடிப்படையில் இந்த ஆவணப்

பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை தகவலாக கொடுக்க வேண்டுகிறேன்" என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திருமதி. தனக்கோடி அவர்கள், தனது மகன் திரு.ரமேஷ் என்பவருடன் ஈரோடு மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.த.சங்கர், உதவியாளர் சார் பதிவாளர் (பொ), கவுந்தப்பாடி சார்பதிவகம் அவர்கள் ஆஜராகி, ஏற்கனவே மனுதாரருக்கு 27/06/2025 மற்றும் 10/09/2025 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்ததோடு, தற்போது 04/08/2026 தேதியிட்ட சமீபத்திய தகவலையும் கொண்டு வந்திருப்பதாகக் கூறி, அதன் நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

**3. எனவே, பொதுத் தகவல் அலுவலர் / சார் பதிவாளர் (பொ), கவுந்தப்பாடி சார்பதிவகம் அவர்கள் மேற்சொன்ன 04/08/2026 தேதியிட்ட சமீபத்திய தகவலை மனுதாரருக்கு உடனடியாக விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர், மேற்சொன்ன 04/08/2026 தேதியிட்ட தகவல் கிடைக்கக் பெற்றவுடன் அதனை பார்வையிட்டு, ஆய்வு செய்து, அதன் மீது ஏதேனும் ஆட்சேபனை இருப்பின், அதனை இனவாரியாக 31/08/2026-க்குள் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு, மனுதாரரிடமிருந்து ஆட்சேபனை கடிதம் கிடைக்கப் பெற்றவுடன், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் ஆட்சேபனை கடிதத்தின் அடிப்படையில் சரியான தகவல்களை 15/09/2026-க்குள் விரைவு அஞ்சல் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்சொன்ன உத்தரவுகளுடன், இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**வழக்கு எண். SA 17275/SCIC/2025**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
கவுந்தப்பாடி சார்பதிவகம்
ஈரோடு மாவட்டம் - 638 455.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி.தனக்கோடி
த/பெ.கந்தசாமிக் கவுண்டர்,
எண்.65, ஓம் காளியம்மன் கோயில் வீதி
ஆ.புதுப்பாளையம், சக்தி நகர் அஞ்சல்
பவானி, ஈரோடு - 638 315
Phone: 98423 85825.

RG/Sr.PC